உ
சிவமயம்

# அருள் ஒளி

18/4
நூலகம்



மலர் 9


மானிப்பாய் மருதடிப் பிள்ளையார்
கழலடி போற்றி.

சித்திரை
மாத இதழ்

## புத்தாண்டுச் சிறப்பு மலர்

2003

வெளியீடு
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



எல்லாம் எப்பவோ முடிந்தகாரியம்
ஒரு பொல்லாப்பும் இல்லை.



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2003 சுபானு வருடம் சித்திரை மாதம்

வெளியீடு .
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 9


## சிங்கப்பூர் செண்பக விநாயகர் ஆலயம் சிங்கப்பூர் தேசிய வரலாற்று நிலையமாகப் பிரகடனம்

*தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இன்றும் இந்துமதச் செல்வாக்கு மிக்க திருநாடாக விளங்குவது சிங்கப்பூர். இந்துக் கோயில்கள், இந்துப் பண்பாட்டு விழாக்கள், தமிழ் மொழிக்குரிய மதிப்பு அனைத்தும் ஒருங்கே நிலவும் இத் திருநாட்டின் சிறப்பு இந்துக்களுக்கு, தமிழர்களுக்கு பெருமைதரும் விடயமாகும். பிரித்தானியரின் ஆட்சி இலங்கையிலும் இந்தியா மலேசியா போன்ற நாடுகளிலும் நிலவிய காலத்தில் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் வேலை வாய்ப்புக் கருதி பாய்க் கப்பல் ஏறிச் சென்ற இடங்களில் மலேயா நாடு முதன்மையானது. மலேயா நாடு இரு கூறாகி சிங்கப்பூர் பிற்காலத்தில் தனி நாடாகியது. 1875களில் ஈழத்தைச் சேர்ந்த தியாகராசா எதிர் நாயகம்பிள்ளை என்னும்பெரியார் சிறிய குளக்கரையின் அருகே செண்பக மரத்தடியில் கண்டு எடுத்து பூஜித்த பிள்ளையாரே இன்று பெருங்கோயில் உருவாக வித்திட்டது. காத்தோங் சிலோன் சாலையில் இன்று பிரமாண்டமான பெருங்கோயிலாகஅமைந்துள்ள சிங்கப்பூர்செண்பகவிநாயகர் கோயிலை 07-02-2003 முதல் சிங்கப்பூர் அரசு வரலாற்று நிலையமாக பிரகடனப்படுத்தியிருப்பது இந்து சமயவரலாற்றில் முக்கிய அம்சமாகும். S. C. T. A. என்றழைக்கப்படும் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம் 1909ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1923ஆம் ஆண்டு முதல் இச்சபையின் கீழ் இவ்வாலயம் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்து மக்கள் ஒன்றுகூடும் திருக்கோயிலாக பரிணமித்த இவ்வாலயம் சார்ந்த மக்கள் இத்திருக்கோயில்*

பணியோடு தமது தாயகமான யாழ்ப்பாணத்திலும் கோயில் திருப்பணிகள் சிறக்கவும் பாடசாலைகள் எழுச்சி பெறவும் பெரும் பங்காற்றினர். குறிப்பாக மிசனரிமாரின் கலவிச்சாலைகளோடு இந்துக்களின் கல்விச்சாலைகள் போட்டி போட அன்று உதவியவர்கள் சிங்கப்பூர் மலேயா வாழ் தமிழ் மக்கள் என்றால் மிகையாகாது. தாம் சார்ந்த கிராமத்துக் கோயில்கள், பாடசாலைகள் மீது இவர்கள் பெரும் அக்கறை கொண்டனர் எனலாம். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, உரும்பராய் இந்துக் கல்லூரி போன்ற பெரிய கலலூரிகள் முதல் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை போன்ற ஆரம்பநிலை கல்விச் சாலைகள் பல சிங்கப்பூர் வாழ் மக்களின் பங்களிப்பில் எழுந்தவை என்பதை மறக்க இயலாது.

சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கத்தால் பராபரிக்கப்பட்ட இவ்வாலயம் 1930ஆம் ஆண்டு திரு. சோமநாதர் முத்துக்குமாருபிள்ளை என்பவரின் தலைமையில் முதலாவது கும்பாபிஷேகம் நடாத்தப்பெற்று காலத்துக்குக்காலம் வளர்ச்சி பெற்றது 1942 ஜனவரி 22ஆம் நாள் 2ஆம் உலகப் போரில் இவ்வாலயம் மிகுந்த சேதமுற்றது. எனினும் அடியார்களின் அயராத முயற்சியால் மீண்டும் ஆலயம் கட்டியெழுப்பப்பட்டது. 1960 முதல் சமய வகுப்புகள் புராண படிப்புகள் யாவும் நடைபெற்று எழுபதுகளில் ஈழத்தில் இருந்து அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி முதல் பலர் அழைக்கப்பட்டு சைவ சமய விரிவுரைகள் நடாத்தி ஆலய நெறிமுறை வளர்க்கப்பட்டது. தற்போது ஆலயம் முற்றாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 71 அடி உயர இராஜ கோபுரம் முதல் கருங்கற்றூண் வேலைப்பாடுகளுடனான மண்டபங்களுடன் ஆலயம் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மாடி கொண்ட மிகப் பெரிய கல்யாண மண்டபம், அன்னதான மண்டபம், அறநெறிப் பாடசாலை யாவும் இவ்வாலயத்தில் சிறப்பு அம்சமாகக் காணப்படுகிறது. கருவறை விமான கலசபீடம், கொடித்தம்பம் போன்றவை தங்கலோகத்தில் அமைக்கப்பட்டு பார்ப்பவர்களை அதிசயிக்கத் தக்க வகையில் அவை சிறப்புற்றிருக்கின்றன. ஆலய கட்டிட நிர்மாணம் இந்திய சிற்பசாலையில் பெருந்தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு கப்பல் வழியாகக் கொண்டு வந்து பொருத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆலய வாசலில் இருபெரும் கருங்கல் யானை பொருத்தப்பட்டு இருப்பது காண்பவர்களை வியக்கவைக்கிறது. இத்திருக்கோயிலை சிங்கப்பூர் அரசு தேசிய சொத்தாக மதித்து சிங்கப்பூர் பிரதமர் திரு. கே. சோக் ரொங் (GOH CHOK TONG) 07-02-2003 அன்று நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு பிரகடனச் சின்னத்தை திறந்து வைத்தமை இந்துக்களின் வரலாற்றில் குறிப்பாக சிங்கப்பூர் வாழ் இந்துக்களின் வரலாற்றில் முக்கிய அம்சமாக அமைந்தமை குறிப்பிடத் தக்கது. ஈழத்தில் நல்லூர் முதல் கதிர்காமம் வரை புனித ஸ்தலங்களாகவும் வரலாற்று நிலையங்களாகவும் பிரகடனப்படுத்துவதாக 30 ஆண்டுகளுக்கு முன்பே பேசப்பட்டது. எனினும் பயன் ஒன்றுமில்லை. கதிர்காமம் மட்டும் தென் இலங்கையில் அமைந்ததால் பிரகடனம் பெற்றது.

மேலும் ஈழத்தில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்களை புனித சொத்தாக புனிதப்படுத்துவோமாக.

ஆசிரியர்

# அருணகிரிநாதரின் அருள் உபதேசம்

மட்டுநகர் ஏ. பாக்கியமூர்த்தி ஆசிரியர்

## தடுங்கள் மனத்தை! விடுங்கள் வெகுளியை!! தான மென்றும் இடுங்கள்!!!

*இவ்வுலகில் வாழ் உயிரினங்களிலெல்லாம் மேன்மையானது மக்களினம். 'அரிதரிது மானிடராதல் அரிது' என்றார் ஔவையார். இறைவன் இவ்வரும் பிறவியையும் பிறவியின் பயனை அடைவதற்குத் தனுகரணபுவன போகங்களையும் படைத்தது உயிர்கள் மேல் கொண்ட பேரிரக்கத் தினாலன்றோ? தனது பிராரத்துவ வினைப்பயனால் எத்தனையோ பிறவியை எடுத்த இவ்வுயிருக்குப் பிறவியின் முடிந்த பேறாகிய வீட்டின்பத்தை அடைவதற்கு இறைவன் இவ்வரிய பிறவியைக் கொடுத்து ஒரு அரிய சந்தர்ப்பத்தையும் நல்கியிருக்கிறான். ''இப் பிறவி தப்பினால் எப்பிறவி வருமோ எது வருமோ அறிகிலேன்'' என்றார் தாயுமானவர். இவ்வுலக வாழ்வு நமது நெடுந்தூரப் பிரயாணத்தில் ஒரு தங்கு மடமென்றே சொல்லலாம்.*

*இறைவன் ஆன்மாவுக்கு அறிவைக் கொடுத்திருக்கிறான். கண்ணொளி எவ்வாறு சூரியவொளியோடு கலந்து உலகப் பொருட்களைக் காண்கின்றதோ அதேபோல் சிற்றறிவுடைய உயிரினம் பேரறிவாகிய இறைவனின் துணையோடு தன்னையும் அறிந்து அவனையும் அறிய வேண்டும். உயிர்கள் என்றும் அழியா இன்பத்தை விரும்புவன. பேரின்பப் பெருங்கடலாக இறைவன் கிடந்தும் அதை அறிந்து அழியா இன்பத்தில் மூழ்க எண்ணுவதுமில்லை, எத்தனிப்பதுமில்லை. அவ்வாறு அறிந்து இன்புற்ற தாயுமானவர், நம்மை*

> ''காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவ
> போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
> ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற்றிட நாமினி யெடுத்த
> தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே''

*என்று நாம் எடுத்த பிறவியொழியு முன்னே பிறவியின் பேற்றை அடைய ஓடி வாருங்களென அழைக்கிறார்.*

திருவருட் சக்தியாகிய உமையம்மையார் இவ்வுயிருக்கு உடலையும் ஐம்புல உணர்ச்சியையும் உலகத்தையும் அதிலுள்ள நுகர் பொருட்களை யும் படைத்தது உலகச் சார்பு கொண்டழியாது உலகச் சார்புக்குச் சார் பாயுள்ள கடவுட் சார்பைப் பற்றித் தன்னிலைமையை மன்னுயிருக்குக் கொடுப்பதே என்பது சைவ சித்தாந்த உண்மை.

''தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
பின்னமிலா னெங்கள் பிரான்''

என்று திருவருட்பயன் சக்தியை வியந்து கூறுகிறது. இவ்வுண்மை படவே உலகப் பொது மறையும்

''சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்று அழித்துச்
சார்தரா சார்தரு நோய்'' என்கிறது

எனவே இவ்வுலகச் சார்பை விட்டுக் கடவுட் சார்பை அடைய எத் தனையோ பேர் காட்டகத்தே சென்று கடுந்தவம் புரிகின்றார்கள். பிர மச்சாரிய விரதம் பூண்டு பிறருக்குத் தொண்டு செய்து பெருவாழ்வு வாழ்கின்றனர் சிலர். இல்லறமாம் நல்லறத்தை நடாத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ்கிறார்கள் பலர். இவர்கள் எல்லோரும் ஓரளவுக்குக் கடவுட் சார்போடுதான் வாழ்கிறார்கள். இவர்களைவிட ஒரு பெரிய கூட்டம் செய்வதறியாது பிறவியின் பயனையறியாது, பயனை யடையும் வழிவகைகளையறியாது, கொண்டதே கோலம் கண்டதே காட்சியென்று எண்ணி, இவ்வுலக வாழ்வே வாழ்வு மறுமை வாழ்வு வாழ்வு இல்லையென்று இறுமாந்து, நடுக்கடலில் சுக்கான் உடைந்த ஓடம்போல் திசை தெரியாது திக்கு முக்காடுகிறார்கள்.

இவர்களைப் பார்த்தார் அருணகிரிநாதர், பொய்வாழ்வை நீக்கி மெய்வாழ்வைப் போதிக்கிறார். பேரின்பத்தையடையும் வழியைக் காட்டி அவ்வழியில் செல்வதற்கு உறு துணையாக இரண்டு மெய் ஞானக் கண்களையும் ஒரு ஊன்று கோலையும் கொடுத்து, செல் லுங்கள் பேரின்பம் தானேயுமக்கு வெளிப்படும் என்று அருளுபதேசம் செய்கின்றார் அநுபூதிச் செல்வர்.

அன்னார் கொடுத்த இரண்டு கண்களும் ஊன்று கோலும் எவை? கந்தரலங்காரம் பதினாறாவது செய்யுளில்

''தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்தபடி இருங்கோள் எழுபாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்க வைவேல்
விடுங்கோனருள் வந்து தானேயுமக்கு வெளிப்படுமே''

தடுங்கள் மனத்தை, விடுங்கள் வெகுளியை, தானமென்றும் இடுங்கள் என உபதேசிக்கிறார். இச் செய்யுளை மேலெழுந்த வாரி யாகப் பார்த்தால் வெறும் நான்கு வரிக் கட்டளைக் கலித்துறையாகவே காணப்படுகிறது. கருத்தை ஊன்றி ஆராய்வோமானால் கந்தரலங் காரத்திற்கே ஓர் நடுநாயகமான செய்யுளாகத் தோன்றுகின்றது.

அநுபூதிச் செல்வர் கொடுக்கும் முதலாவது ஞானக் கண் 'கடுங் கோள் மனத்தை' என்பது. மனம் ஓர் அறிவில்லாத நுண்ணிய பொருள். இது மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகள் மூலமாக சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புறப்பொருட்தன்மைகளைப் பற்றும் தன்மையுடையது. கண்ணுள்ள எல்லா உயிர்களுக்கும் அதன் மன அறிவு அதிகமாகக் கண்களின் வாயிலாகவே விளங்குகின்றது. இதனால்தான் தற்கால உளவியலறிஞர் எண்பதுவிதமானகல்வியைக் குழந்தைகள் காட்சிமூலமே பெறுகின்றனர் என்று கூறுகின்றார்கள். கண் எங்கு நோக்குகின்றதுவோ அங்கேயே மனமும் குவிந்துவிடுகின்றது. கண்களால் மாறி மாறிப் பற்றப்படும் பொருள்களிடத்தில் மனமும் மாறி மாறிப் பதிவதனால்தானோ என்னவோ நம் முதாதையர் மனத்தைக் குரங்கிற்கு ஒப்பிட்டனர்.

> ''காடுங் கரையு மனக்குரங்கு கால்விட்டோட அதன் பிறகே
> ஓடுந் தொழிலாற் பயனுளதோ''

என்று தாயுமான சுவாமிகள் வினவுகின்றார்.

மனத்தைத் தடுத்து ஒரு வழிப்படுத்துவதற்குக் கண்ணை அலையவிடாமல் கட்டுப்படுத்துதல் அவசியம். இக் கூற்றைச் சுவாமி மறைமலையடிகள் தனது மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி என்னும் பெருநூலில் பின்வருமாறு விளக்குகிறார். ''நமதறிவு ஒரு வழிப்பட்டு நிற்கும்போதும், நமது மனம் எங்கும் சென்று அலையாமல் நிற்கும்போதும் நம்முடைய இமைகள் இமையாமல் நிற்கும் என்பதாம்; ஆகவே கண்களை அடிக்கடி இமைக்காமல் திறந்தபடியே வைத்துப் பழகுதல் மனத்தை ஒருவழிப் படுத்துவதற்கு ஏற்ற முறையன்றோ? இவ்வுண்மையை உணர்த்துவதற்கன்றோ மக்களிலும் உயர்ந்த தேவர்கள் இமையா நாட்டத்தினர் என்று சொல்லப்படுவராயினர்.''

தியானத்தாலும் யோக சாதனைகளாலும் மனத்தைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால் அருணகிரிநாதர் இதை இறைவனிடமே

> ''ஓரவொட்டா ரொன்றை யுன்ன வொட்டார் மலரிட்டுனதாள்
> சேர வொட்டா ரைவர் செய்வதென்?''

என முறையிடுகிறார். மனம் சென்று தொழிற்படும் ஐம்பொறிகளும் அதனதன் விருப்பிற்கு அலைந்து திரிவதால் என்னிஷ்டத்திற்கு உன்னைத் துதிக்க முடியவில்லையே இறைவா என் செய்வேன் என வேண்டுகிறார். மனவாசகங் கடந்த தாயுமான அடிகளாரும்

> ''வாசா கயிங்கரியம் அன்றி ஒரு சாதனம்
> மனோவாயு நிற்கும் வண்ணம்
> வாலாய மாகவும் பழகியறியேன் என்றும்
> ''பாழான என்மனங் குவிய ஒரு தந்திரம்
> பண்ணுவ துனக் கருமையோ'' என்றும்

பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தத் திடம் கேட்கிறார்.

வேண்டத்தக்க தறிவோனும் வேண்ட முழுதும் தருவோனுமாகிய எம்பெருமான், அநுபூதிச் செல்வருடைய வேண்டுகோளுக்கிணங்கி வேண்டியதைக் கொடுத்தான். வேண்டியதைப் பெற்ற அருணகிரியார்

"கடத்திற் குறத்தி பிரானருளாற் கலங்காத சித்தத்
திடத்திற் புணையென யான் கடந்தேன்"

என்பதால் வெங்காம சமுத்திரத்தை மன ஒருமைப்பாட்டின் மூலம் கடந்து விட்டேன் என்று தனது சுகானுபவத்தைக் கூறுகின்றார்.

மனம் பொறியுணர்வுகளின் பால் செல்லாமலும் அவ்வாறு செல் லும் மனத்தை இறைவன்பால் மடைமாற்றம் செய்யவுமே திருவங்க மாலை பாடினார் திருநாவுக்கரசர்.

மனத்தைத் தடுத்து நிறுத்தி ஒரு நிலைப்படுத்தி உலகப் பற்றை விட்டுக் கடவுட் பற்றைப் பற்றிய பலர் உலகம் போற்றும் உத்தமர்க ளாகவும், வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டிகளாகவும், மெய்ஞானிக ளாகவும் வாழ்ந்திருக்கிறார்கள். அட்டமா சித்திகளைப் பெற்று விஞ் ஞானிகளாலும் கண்டு பிடிக்க முடியாத எத்தனையோ அதிசயங்களை யெல்லாம் செய்து போந்துள்ளார்கள். உலகமுள்ளவரை உயிரினம் அவர்களை மறப்பதற்கில்லை. மனத்தை அலைய விட்டு அல்லற்படும் நம் போன்றவர்கள் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றனர். நான் எனதென்னும் அகங்கார மமகாரமும் மனம் உலகப் பற்றைப் பற்றுவ தனாலேயே யுண்டாகின்றது. இச்செருக்கை அறுப்பவர்களே தன்னையு மறிந்து தன்னுள் இருக்கும் இறைவனையும் அறிவர். இதனாலன்றோ

"ஆங்காரமு மடங்கா ரொடுங்கார் பரமாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மாறார்..." என்று கந்தரலங்காரமும்

"ஆங்கார மற்றார் அறிவர் அணியம் பலத்தான் ஆடல்"

என்று உண்மை விளக்கமும்

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என வள்ளுவரும்

"உள்ளதே போதும் நான் எனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மன்தற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்"

என்று தாயுமான சுவாமிகளும் கூறுகின்றார்கள்.

நன்மைக்கும் தீமைக்கும் காரணமாக இருப்பது மனம். இதனால் தான் மனத்தைத் தடுங்கள் என்று மெய்ஞானக் கண்ணைத் திறந்து அஞ்ஞான இருளையகற்றுகிறார் அருணகிரியார்.

மனத்தைத் தடுத்தால் மட்டும் போதாது. வெகுளியை விட வேண்டும். குணக்குன்று என்று சொல்லக்கூடிய உத்தமர்கள் கூட, சில சந்தர்ப்பங்களில் கோபத்தின் வசப்பட்டு முறை தவறி நடந்து தகாத வார்த்தைகளைப் பேசி, பைத்தியக்காரர்கள் போல் நடந்து விடுகி றார்கள். ஓராண்டு காலமாக அமைதியில் இருந்த மனம் ஒரு நொடிப் பொழுதில் வரும் கோபத்தால் நிறைதவறி விடுகிறது. எனவே அமை தியைக் குலைக்கும் கோபத்தை விடவேண்டும். இதைத் தாயுமானவர்

> " அமைதியொடு பேசாத பெருமைபெறு குணீசந்த்ர
> ராமென இருந்த பேரும்
> நேராக வொரு கோபம் ஒருவேளைவர அந்த
> நிறைவொன்று மில்லாமலே
> நெட்டுயிர்த் துத்தட்டழிந்துளறு வார்..." என்றார்

> "மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்"

என்ற வள்ளுவர் அடுத்த குறளில்

> " அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
> இழுக்கா இயன்றது அறம்"

என்று அறத்திற்குதவாத நான்கினுள் வெகுளியையும் ஒன்றாக வைத் துக் கூறினார்.

தீவினைகள் வெகுளியாலேயே ஏற்படுவதால் எவர் பொருட்டும் வெகுளாமை நன்று. முற்றும் துறந்த முனிவர்களின் முகத்தில் ஒரு வகை ஒளி பரந்திருக்கக் காணலாம். உள்ளம் உவகையோடு இருக்கும். இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே முகமலர்ச்சி இவையெல்லாம் மனத் தில் சினமிருக்க இடங்கொடுத்தால் ஒரே நொடியில் பறந்து, முகத்தில் கொடுமையும் உள்ளத்தில் பொறாமையும் கொண்டு காண்போர் அஞ் சத்தக்கவாறு காட்சியளிப்பர். சினம் ஓர் உட்பகையாக இருந்து ஒரு வனைத் தெரியாமலே கொன்று விடுவதோடல்லாமல் அவனைச் சார்ந் தோரையும் அழித்துவிடும். ஒருவன் சினம் கொள்ளும்போது குண்டிக் காயிலுள்ள சுரப்பியொன்றில் ஓர் வகையான விடநீர் சுரந்து உதி ரத்தோடு கலப்பதனால் நரம்பு முறுக்கேறிப் பலவீனப்பட்டு விடுகிறது. இதனால் அவனுடைய ஆயுட்காலம் குறைக்கப்படுகிறது. எனவே தான் தன்னையே கொல்லும் சினம் என்றார்கள்.

கோபத்தையடக்கா வேந்தர்கள் கொடுமையான செயல்களைச் செய்து மக்களின் பழிச்சொல்லுக்குப் பாத்திரமாகி அழிந்தொழிந்து போயுள்ளார்கள். சினத்தை ஒருக்காலும் தன் மனதிற் கொள்ளாதவன்

தான் நினைத்த எல்லாப் பேறுகளையும் பெறுவான். மனத்தை ஒரு நிலைப்படுத்திச் செய்யும் தவத்தின் பயனை அடைய விடாமல் தடுப்பது வெகுளி.

" உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின் " என்றார் தெய்வப் புலவர்

மனத்தைத் தடுத்து வெகுளியை விட்டால் மட்டும் போதாது. எல்லா உயிர்களிடத்திலும் இறைவனைக் கண்டு தான தருமங்கள் செய்ய வேண்டும். நாம் சென்று கொண்டிருக்கும் தொலையா வழிக்கு ஒரு ஊன்று கோலையும் தருகிறார் அருணகிரியப்பர். " தானமென்றும் இடுங்கோள் " என்பது அவர் தரும் ஊன்றுகோல்.

மக்களுக்கு அத்தியாவசியம் வேண்டப்படும் உணவு உடை இருப்பிடம் என்னும் மூன்றினுள்ளும் முன்னையதே அதிமுக்கியமானது. அன்னதானத்தையே அருணகிரிநாதர் தனது கந்தரலங்காரத்தில் பலவிடங்களில் வற்புறுத்துகிறார். உணவு இல்லா விட்டால் உயிர் வாழ்தல் அரிது. பசியைப் போல் கொடிய நோய் பிறிதொன்றில்லை.

நாம் ஒரு பொருளைத் தானமாகக் கொடுக்கும்போது அதற்குப் பிரதியுபகாரம் கருதக் கூடாது. வலக்கை கொடுத்தது இடக்கைக்குத் தெரியக் கூடாதென்பர். தானம் நன்மை பயக்குமென எண்ணிச்செய்தால் அதனால் ஏற்படும் நல்வினையை அனுபவிக்கப் பிறக்கவேண்டும். பிறப்பறுப்பதற்கு ஏதுவாகிய தானம் பிறப்பைக் கொடுப்பதற்கு ஏதுவாக முடியும். எனவே தான் அநுபூதிச் செல்வர்

" வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க் கென்றும்
நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்... "

என்றார். இறைவனுடைய புகழைப் பாடியும் பேசியும் வாழ்த்தியும் அவனுக்காகவே செய்கிறோம் என்ற நினைவோடு பிரதியுபகாரம் கருதாமல் தானம் செய்யவேண்டும். வள்ளுவர்

" வறியார்க் கொன்றீவதே யீகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து " என்றார்.

அறம் என்பது 'அறு' என்னும் அடிப்படையில் பிறந்த ஒரு சொல். அது பிறவி வேரை அறுப்பது. அறத்தைப் பொருள்ள போதே செய்து விட வேண்டும். நாளை செய்வோம், நாளை மறுநாட் செய்வோம் எனக் காலதாமதம் செய்யக்கூடாது. நாம் பெரிதாக எதுவும் செய்து விட வேண்டியதில்லை. பறையறைவித்துப் பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு விளம்பரத்திற்காக அன்னதானம் செய்யவேண்டியதில்லை நம் நிலைமைக் கேற்றவாறு இறைவன் புகழைப்பாடி இருபிடி சோறு கொடுத்தாலே போதுமானது.

'' நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின் '' '' இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரு '' என்பது அலங்காரம்

'' ஒல்லும் வகையான் அறிவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல் '' என்பது பொதுமறை

தாங்கள் பாதகத்தாற் தேடிப் புதைத்து அறம் செய்யாமல் பசித்தோர் பார்த்திருக்க உண்ணும் பல பணக்காரர்களைப் பார்த்து அருணகிரிநாதர் என்ன சொல்கிறார் என்றால் 'ஐயா, மனைவி மக்கள் மாடி வீடு பொன் பொருள் எல்லாம் உன் பிறகே வராது. உள்ள போதே கொடுத்து விடு. இல்லாவிட்டாற் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணாக்கி மாய்வீர்'' என்கின்றார்.

ஆம். இவ்வுடலை விட்டபிறகு இவ்வுயிருக்கு யார்துணை? இவ்வுலக வாழ்வை மட்டும் பற்றிச் சிந்திக்கும் பெருமக்களே, சற்று மறுமை வாழ்வைப் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள், நாம் செல்லவிருக்கும் வழி சாதாரணமான தொன்றல்ல. ''எரிவாய் நரகக் குழியுந் துயரும் வாய்ப்படக் கூற்றுவனூர்க்குச் செல்லும் வழி.'' இத்தொலையா வழிக்குப் பொதி சோறும் உற்ற துணையாகவும் வருவது, இன்று நாம் பசித்தோர்க்கு இடும் அன்னமும் நீருமாகும். அவர்கள் பசியாற்றிய உணவும் நீரும் நமது தனி நெடுவழிக்குக் கட்டமுதும் நீருமாக அமைகிறது.

''அன்று அறிவாம் என்னாது அறம் செய்க மற்று அது
பொன்றுங்கால் பொன்றாத் துணை'' என்பது தமிழ்மறை

அன்பர்களே! உழவன் வயலில் விதைத்த ஒரு நெல் பல நூறாகப் பெருகி வீடு தேடி வருவதுபோல நாம் செய்யும் தானத்தின் பயனும் நம்மைத் தேடிக்கொண்டு வகுத்தான் வகுத்த வகைப்படி வந்து சேரும். எனவே தானம் செய்யுங்கள். '' எங்காயினும் வரும் ஏற்றவர்க்கிடு '' என்றார் அருணகிரியார். பிறர் பசி தீர்ந்து இன்பமடைவதைக்கண்டு தான் இன்பமடைவதைப் போல் இன்பம் பிறிதில்லை.

''இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு'' என்றும்

'' ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் '' என்றும் தமிழ்மறைஇயம்புகின்றது.

பண்டைத் தமிழ் மக்கள் குடும்ப வாழ்க்கையையும் அறம் என்றே அழைத்தார்கள். இல்லிலிருந்து கணவனும் மனைவியுமாக வருவார் துயரையும் பசியையும் போக்குவது தங்கள் தலையாய கடனாகக் கொண்டு வாழ்ந்தார்கள். '' இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு '' என்னும் ஒரே குறிக்கோளையே தங்கள் இல்லறத்தில் கைக் கொண்டொழுகினர். '' தாள் ஆற்

றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்பது அவர்கள் நாகரீகமாக அமைந்திருந்தது.

வெறும் வயிற்றிற்கில்லைச் சமயம் என்பதை உணர்ந்த சமய குரவர்கள் முதலில் மக்களின் பசிப்பிணியைத் தீர்த்துச் சைவத்தை வளர்த்தார்கள். சம்பந்தரும் அப்பரும் படிக்காசு பெற்றுப் பசிப்பிணி தீர்த்தார்கள். குண்டையூரில் பெற்ற நெல்லைத் திருவாரூர் முழுவதிற் குமே கொடுத்தார் சுந்தரர்.

அறம் செய்வது தொலையா வழிக்குத் துணையும் பிறப்பறுக்கும் பெரு மருந்தும். பிறவிக்குரிய வாசலை அடைக்கும் பெருங்கல் என் கிறார் வள்ளுவர்.

''வீழ்நாள் படாஅமை நன்று ஆற்றின் அஃது ஒருவன்
வாழ்நாள் வழி அடைக்கும் கல்'' என்பது அவர் கூற்று.

தானமும் தவமும் செய்தால் வானவர் நாடு வழி திறந்திடும். எனவே சிவனேசச் செல்வர்காள் சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்று ஈயுங்கள். அருணகிரிநாதரின் அருள் உபதேசத்தின் கண் நின்று பேரின்பம் எய்துங்கள்.

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்!**

---

★ ★ ★

## வெள்ளமும் ஆண்டவனும்

ஆற்றுவெள்ளம் மழைத்தண்ணீர் இவைகளுக்கு இயல்பாக ஒரு குணமுண்டு பொதுவாக அவைகள் யாவும் பள்ளத்தில் தான் பாயும். மேடுகளில் ஏறுவது கடினம். பெரும் மேடுகளாக இருந்தால் கண்டிப்பாக ஏறவே ஏறாது. இறைவனும் இதைப் போலவே இயங்குகிறான். அறிவாலும் சாதி இனங்களாலும் குறைவுபட் டவர்களிடம் இறைவன் இயல்பாகவே செல்வான். என்னிடம் தேவைக்கு மேல் பணம் இருக்கிறது நான் பிறப்பால் உயர்ந்த ஜாதிக்காரன் என்பவைகள் மமதையின் பாற்பட்டவை. இது பெரும் மேடு. மேட்டில் தண்ணீர் ஏறாது. மார்பு நிமிர்ந்த மனிதர்களிடமும் தலைகனத்த பாறை மனத்தாரிடமும் இறைவன் எளிதில் செல்ல மாட்டான்.

நீ படித்தவன் என்றால் அதை தெய்வம் முன்பு காட்டாதே. நீ பணக்காரன் என்றால் அதை ஆண்டவன் முன்பு நீட்டாதே. நீ உயர் ஜாதிக்காரன் என்றால் அதை ஆண்டவன் முன் ஜோடிக்காதே. இவைகளை மறந்து விடு. முன்பு செய்த புண்ணியத்தால் இவைகள் உனக்கு வந்தவை. இவைகளைத் தந்தவன் முன்பு இறு மாப்புக் கொண்டு சென்றால் மீண்டும் திரும்பும் போது இவைகள் உன்னிடம் இருக்காது, பணிவாக நட. பலன் உண்டு. பணிவு என்ற பள்ளமாக மனதை மாற்று. பண்பு என்ற குழியாக இதயத்தை ஏற்று இறைவனின் அருள் வெள்ளம் பள்ளத்தின் வழியாக ஓடி குழியிலே தங்கும். ஆம் மனச் சிந்தனையில் ஸ்ரீ துர்க்கா சித்தர் கலந்து இறைவன் உன் இதயத்தில் தங்குவான்.

உ

# எங்கள் குருநாதன் யோகர் சுவாமிகள்

**செல்வி யோகேஸ்வரி விநாசித்தம்பி அவர்கள்**
தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.

*எனது பெருமதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் ''அருளொளி'' மாதச் சஞ்சிகையைப் படித்து பயன்பெறுபவர்களில் நானும் ஒருத்தி. எனவே ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி பங்குனி ஆயிலிய தினத்தன்று நிகழும் எங்கள் குருநாதன் யோகர்சுவாமிகளின் குருபூசையை ஒட்டி இக்கட்டுரையைஎழுதி அம்மையாருக்கு அனுப்புகிறேன்.*

*சுவாமி ஊனுடல் தாங்கி வாழ்ந்த காலத்தில் பல குடும்பங்கள் அவரோடு தொடர்புபூண்டிருந்தன. சுவாமியோடு பழகிய குடும்பங்கள் எல்லாம் சுவாமியை தத்தம் குடும்ப அங்கத்தவர்களுள் ஒருவராக எண்ணும் வகையில் சுவாமி அக்குடும்பத்தவர்களுடன் அன்புடன் ஒன்றிப் பழகியமை அவரது சிறப்பியல்பாகும். அவ்வகையில் எங்கள் குடும்பமும் சுவாமியோடு ஒன்றிப் பழகியது. என்னுடைய காலஞ்சென்ற தந்தையார் திரு. எஸ். விநாசித்தம்பி அவர்களும் சுவாமிகளின் பேரன்புக்கு ஆளாகியவருள் ஒருவர். அதனால் எனது நாலாவது வயதிலிருந்தே எங்கள் இல்லத்துக்கு வருகை தந்த சுவாமியைக் காணும் பேறுபெற்றேன். நான் வளர்ந்துபெரியவளான பின் தனியாக சுவாமியின் ஆச்சிரமத்துக்குச் சென்ற சமயங்களில் அவருடைய முதலாவது வினாவான ''நீ யார்?'' என்பதற்கு ''விநாசித்தம்பியின் மகள்'' என்றே விடையளித்தேன். ஏனெனில் எனது பெயரைக் கூறினால் என்னையாரென்று இனங்கண்டு கொள்ளமுடியாமல் ''போ வெளியே'' என்று அனுப்பி விடுவாரோ என்ற பயம் எனக்கு. எனவே எனது அருமைத் தந்தைக்கு நன்றிக் கடன்செலுத்த இக்கட்டுரையை எழுதத் துணிந்தேன்.*

*1929ஆம் ஆண்டளவில் ஐயா ஹப்புத்தளை புகையிரதநிலையத்தில் கடமை புரிந்தார். ஐந்து வயதிலேயே தன் தாயை இழந்தமையால் சிறு பராயம் முதல் அவர் மனத்தில் ஏக்கம் குடிகொண்டிருந்தது. சாதுக்களைத் தரிசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். பெரியவராகி புகையிரத இலாகாவில் உத்தியோகம் பெற்றதும் தமக்கு வட இந்தியாவரை இலவசமாகப் பயணம் செய்வதற்கு அளிக்கப்பட்டிருந்த சலுகையைப் பயன்படுத்தி ரிஷிகேஷ் வரை தலயாத்திரை செய்தார். பல சாதுக்களைத் தரிசித்த பின் காந்தியடிகளின் சபர்மதி ஆச்சிரமத்தில் ஒரு மாதம் ஆறுதலாகத் தங்கியிருந்து விட்டு மீண்டும் தமது கடமைக்குத் திரும்பினார் ஒரு சில நாட்களின்*

பின்னர் காட்டு இலாகாவில் பணி யாற்றிய ஐயாவின் நண்பர்களில் ஒருவரான திரு. மாணிக்கவாசகர் அவர்கள் ஐயாவிடம் வந்து ''நேற்று யோகர் சுவாமி என்னிடம் விநாசித் தம்பி என்பவன் எங்கே இருக்கிறான் என்று விசாரித்தார்'' என்றார். அதற்கு ஐயா ''வட இந்தியா வரை போய் சுவாமிகளைத் தான் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அதை விட இந்த மலைகளின் இயற்கை அழகைப் பார்ப்பது இன்பமாக இருக்கிறது'' என்றார். அப்போது அவ்விடத்திலிருந்த அதே புகையிரத நிலையத்தில் பணிபுரிந்த திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் (திருமதி ஞானா குலேந்திரனின் தந்தையார்) ஐயாவிடம் ''நீர் பார்த்துவிட்டு வந்த சுவாமிகள்போல இல்லை. இவர் உண்மையான சுவாமி'' என்றார். அடுத்து சிலநாட்களின் பின் ஐயா தனது நண்பர் ஒருவர் வீட்டில் சுவாமிகளின் முதல் தரிசனம் பெற்றார். சுவாமிகளின் எளிமை ஐயாவை வெகுவாகக்கவர்ந்தது. அன்று சுவாமியிடம் விடை பெறும் போது ''சுவாமி எனக்கு வாழ வழி தெரியவில்லை'' என்று சுவாமியின் கால்களைப் பற்றிக் கொண்டு வேண்டினார். ''நான் மெல்ல மெல்ல சொல்லித் தருவன் தானே'' என்று சுவாமி அருள் புரிந்தார். ''சுவாமி நீங்கள் எப்ப என்னுடைய விடுதிக்கு வருவீர்கள் என்று ஐயா கேட்க, ''நாளன்றைக்கு வருகிறேன்'' என விடை பகர்ந்தார். கூறியபடியே அன்று மத்தியானம் ஐயாவுடைய விடுதிக்கு வருகை தந்தார். ஐயாவிடம் அவருடைய பங்கு மதிய உணவு மட்டுமே இருந்தது. சுவாமிக்கு உணவு தயாரித்து வைக்கவில்லையே என்ற கவலையோடு ''சுவாமி பழம் சாப்பிடுவீர்களா? பால்குடிப்பீர்களா?'' என்று ஐயா கேட்க சுவாமி ''சோறு சாப்பிடுவேன், சுருட்டும் குடிப்பன்'' என்று பதிலளித்தார், உடனே ஐயா தன்னுடைய மதிய உணவை ஒரு வாழை இலையில் வைத்து சுவாமிக்குப் பரிமாறினார். சுவாமி உணவில் பாதிபங்கை இலையின் ஒரு பக்கத்தில் ஒதுக்கி விட்டு மற்ற பாதியை அருந்திவிட்டு கை அலம்பிக் கொண்டார். ''மீதியைத் தான் உண்ணலாமா'' என ஐயா கேட்க சுவாமி உண்ண அனுமதி கொடுத்தார். அதன் பின்னர் சுவாமி ஐயாவின் விடுதிக்கு அடிக்கடி வருகை தருவார். தொடர்ச்சியாக ஒரு மாதம் தங்கிய சந்தர்ப்பங்களும் உண்டு. ஐயாவுடனும் விடுதியிலிருந்த ஏனைய சிங்கள, தமிழ் உத்தியோகத்தரோடும் அன்பாகப் பேசி உறவாடினார். ஐயாவும் மற்றையோரும் வேலைக்குச சென்றபின் சுவாமி தனியாக விடுதியில் இருப்பார். ஐயாவிடம் ஒரு கொப்பி கேட்டுப் பெற்று அதில் பல பாடல்களை எழுதிக்கொடுத்தார். சுவாமி சொல்லச் சொல்ல ஐயா எழுதிய பாடல்களும்உள்ளன. அப்பாடல்கள்யாவையும் ஐயாவின் நினைவாக ''யோக சுவாமியின் அமிர்த வசனங்கள்'' என்னும் நூலாக 1997ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இதனை வெளியிடுவதற்கு எமக்கு முழு உதவியும் செய்தவர் சிவதொண்டன் நிலையத் தலைவர் திரு. அ. செல்லத்துரை சுவாமிகளாவர். சுவாமியும் தானும் மாலை வேளைகளில் மூன்று மைல் தூரம் கால்நடையாகத் தியத்தலாவையில் சென்று அங்கு அந்நாளில் வேலை

செய்து கொண்டிருந்த மார்க்கண்டு சுவாமிகளைப் பார்த்து வருவதையும் ஐயா நினைவு கூருவர்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தும் சுவாமி யாழ்ப்பாணத்தில் இருக்கும் இடத்தை ஐயா அறிந்திருக்க வில்லை. எனவே ஐயா சுவாமியிடம் ''நீங்கள் யாழ்ப்பாணத்தில் எவ்வி டத்தில் இருக்கிறீர்கள்'' என்று கேட் டார். அதற்கு சுவாமி 'நீ வந்து பார்த் தால் தானே தெரியும்' என்றார். அடுத்த தடவை லீவில் யாழ்ப்பாணத் துக்கு வந்த சமயம் தனது தந்தை யோக சுவாமியைப் பார்க்க கொழும் புத்துறைக்குச் சென்றார். கால் நடை யாகவே சென்று காலை நாலரை மணியளவில் சுவாமியின் குடிசைப் படலைக்கு வெளியே இருவரும் வந்து நின்றனர். சுவாமி குடிசைக்குள் இருந்தவாறே பலத்த குரலில் 'சின் னத்தம்பி வா' என்று அழைத்தார். சுவாமியிடம் போயறியாத பாட்ட னாருக்கு வெளியே வந்து பார்க்கா மலே தன் பெயரைச் சொல்லி சுவாமி கூப்பிட்டமை ஆச்சரியமாக இருந்தது

1933ஆம் ஆண்டில் ஐயாவுக்கு திருமணம் பேசி முற்றானது. அத னைப் பற்றி பல தடவைகள் ஐயா சுவாமியிடம் சென்று கூறியும் சுவாமி மௌனம் சாதித்தார். திரு மணம் முடிந்ததும் தனக்கு திருமணம் முடிந்ததை சுவாமியிடம் ஐயா கூறிய போது சுவாமி மெத்த நல்லது. நான் யாரையும் குழப்பி விடுவதில்லை. என்று விடை பகர்ந்தார். நான் சிறு பிள்ளையாக இருந்தபோது நிகழ்ந்த ஒரு சம்பவம் மனதில் நிலைத்திருக்கி றது. 1946ஆம் ஆண்டு ஒரு நாள் காலை சுவாமி மாட்டு வண்டியில் எங்கள் வீட்டுக்கு வந்தார். எனது அம்மாவைக் கூப்பிட்டு அவவுடைய கையில் ஒருநூறு ரூபாய் தாளைக் கொடுத்து ''நான் இந்தியாவுக்கு யாத்திரை புறப்பட்ட போது தலை மன்னார் புகையிரத நிலையத்தில் விநாசித்தம்பியைக் கண்டேன். இந்தி யாவில் என்னுடைய வழிச்செல வுக்கு இந்த நூறு ரூபாயைத் தந் தார் நான் எவ்வளவோ முயன்றும் இந்தக் காசு செலவழிபடவில்லை, இதனை நீ வைத்துக்கொள்' என்று கூறிச் சென்றார். அப்போது நாம் ஒரு வாடை வீட்டில் இருந்தோம். ஒரு சொந்த வீடு வாங்க அம்மா அல்லப் பட்டுக் கொண்டிருந்தா. இந்தக் காசு கையில் கிடைத்த சில நாட்களில் வீடு வாங்கும் அம்மாவின் ஆசை நிறைவேறியது. ஐயா எப்ப சுவாமி யைத் தரிசிக்க வந்தாலும் சுவாமிக்கு வேட்டியும், காசும் கொடுப்பார். வேட்டியை எடுத்துக்கொண்டு சுவாமி காசை அப்போது சிறுபிள்ளைகளாக இருந்த எங்களிடம் பிரித்துக் கொடுப் பார். சுவாமிக்கும் ஐயாவுக்கும் இடையே 35 வருடங்கள் நிலவிய அந்த மாறாத இன்ப அன்பு நிறைந்த அனுபவங்களை ஒரு சில பக்கங் களில் அடக்கிக்கொள்ள முடியாது. எனவே சுவாமியின் இறுதிக்கால சம் பவங்களை நினைவு கூர விரும்பு கின்றேன்.

1961ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி அன்று சுவாமி ஒரு பசுக் கன்றால் இடித்து வீழுத்தப்பட்டார். அதன் பின் எழுந்து நடக்க முடியாதவ ரானார். தனது 89ஆவது வயது வரை தனக்கு சரீரத்தொண்டு செய்ய

சுவாமி ஒருவரையும் அனுமதிக்க வில்லை. அத்தொண்டை அடியார்கள் செய்து புண்ணியம் ஈட்ட வாய்ப் பளித்த நிகழ்வே அது. 1961இல் அதிஷ்டவசமாக ஐயாவுக்கு யாழ்ப் பாண புகையிரத நிலைய அதிபராக மாற்றம் கிடைத்தது. அங்கிருந்தே அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். மனமார சுவாமிக்கு பணி விடை செய்தார். ஐயா தன்னுடைய இறுதிக் காலத்தில் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் சுவாமியின் சமாதிக் கோவிலில் பணி செய்து கொண்டி ருந்த எனது சகோதரி யோகபூஷணி யுடன் தங்கியிருந்தார். 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொழும்புத் துறையில் பெரும்மோதல் ஏற்பட்டது. திரு. திருநாவுக்கரசு அவர்களின் வள வில் அமைக்கப்பட்ட குடிசைக்கு வரு முன்னர் சுவாமி வீற்றிருந்த இலுப்பை மரம் கண்ணி வெடி வெடித்ததால் வேரோடு சிதறிச் சாய்ந்தது. அந்த இலுப்பை மரத்தடியிலேயே சுவாமி குடிகொண்டிருந்தார். பின்பு திரு. திருநாவுக்கரசு அவர்களின் தாயார் அவரை வலிந்து அழைத்து வந்து தமது வளவில் அமரவைத்தார். ஷெல் அடிகளால் சுவாமிகளின் சமாதிக் கோயில் கூரை தூளாய்ப் பறந்தது. அப்போது ஐயா நோய்வாய்ப்பட்டி ருந்தார். அதன் பின்னர் ஐயாவும் சகோதரியும் அகதி முகாமுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. மரண வாயிலில் நின்ற ஐயாவை நான் இருக்கும் வீட்டுக்கு கொண்டு வந் தேன். மரணமாவதற்கு சில மணி நேரத்துக்கு முன் சுவாமியின் கோயில் கூரை போட்டாச்சா'' என்று ஐயா எம்மிடம் கேட்டார். ஓம் என்று பதிலளித்தோம். தனது குரு நாதனை நினைத்துக் கடைசித் தட வையாக தனது இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டார். இடப் பெயர் வால் எமக்கு அருகில் உற்றார் உறவி னர் யாவருமே இல்லை. ஆயினும் தன் குருநாதனுக்கு அருந்தொண் டாற்றி ஐயா ஈட்டிய புண்ணியம் பல வடிவில் வந்து நின்றது. அருகே இருந்த ஒரு அகதி முகாமில் தங்கி யிருந்த எனது நண்பி திருமதி நவ மணி அவர்களாகவும் அவவுடைய கணவர் டாக்டர் அம்பிகைபாகன் அவர்களாகவும் வணபிதாக்கள், அருட்சகோதரிகளாகவும், இராணுவ அதிகாரிகள் சிப்பாய்களாகவும் சூழ்ந்து நின்று ஐயாவின் இறுதிப் பயண ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்து தந்தது. நாம் சுவாமியின் ஆச்சிரமத்துக்குப் போகும் சமயங் களிலெல்லாம் சுவாமி எங்களிடம் 'என்னை எனக்கு அறிவித்தான்' என் னும் நற்சிந்தனைப் பாடலைப் பாடச் சொல்லுவார். அன்றும் நாம் எங்கள் குருநாதன் பாடலையே மனமுருகப் பாடி எங்கள் அன்புத் தந்தையின் பாதங்களுக்கு எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்கி அவரைத் தேடி வந்து ஆட்கொண்ட அவருடைய குரு நாதனின் திருவடியைச் சென்றடைய அவருக்கு விடை கொடுத்தோம். சுவா மிகளது சித்துக்களை வைத்து அவரை அளக்கும் இக் காலத்தில் எங்கள் குருநாதன் எங்கள் வாழ் நாளில் எங்களுக்கு நிகழ்த்திக் காட் டிய திருவிளையாடல்களுள் தலை சிறந்த திருவிளையாடலை அன்று தான் என் கண்ணாரக் கண்டேன் என்று கூறி எமது குருநாதனின் திரு வடிகளை வணங்கி அமைகின்றேன்.

குருநாதன் திருவடி வாழ்க

உ
சிவமயம்

# முத்தமிழ் வேதத்தில் ஆகமத்தின் அரும்பொருள் – 4

சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

(சென்ற மாத இதழ் தொடர்ச்சி .....)

**கிரியை :**

*கங்கையும் கலைமதிக்கொழுந்தும் கடுக்கையும் முடிமேன் முடித்தவர் கைலாயபதி. அருவமும் உருவமும் அருவுருமான பரம்பொருள் பத்தனுக்காகப் பரமாசாரியத் திருவுருவம் தாங்கினார். 'கொன்னெறுழி தன்னுருவு கொண்டொருவர் தேடும் பொன்னடி எனுஞ் சலசம் மண் மிசை பொருந்த எழுந்தருளினார் (கொன்எறுழி — பெரியபன்றி. சலசம் — தாமரை) திருப்பெருந்துறையில் குருந்தடி பொருந்திக் குரு மூர்த்தமாகி வீற்றிருந்தார். வாதவூரடிகளாருடைய பாசக்கட்டு அறுங் காலம் பார்த்திருந்தார்.*

*அடிகளாரை ஆட்கொள்ளும் காலம் வந்ததும் வாதவூரரை அடிமையாக ஆட்கொண்டார். மாதொரு பாகனார் மன்னு மாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமங்களிலே சித்தாந்தப் பொருளை உபதேசித்தருளினார். மணிவாசகனாருக்குக் கிரியைப் பின்வருமாறு விளக்கி அருளினார்.*

*''வாசனைத் திரவியங்களும், நறுமணங் கமழும் தூபமும் ஒளி விளங்கும் தீபமுங், தூய திருமஞ்சனமும், கொத்துக்களில் அலர்ந்த மணம்கமழ் மலரும், ஏனைய அர்ச்சனைக் கரணங்களுங் கொண்டு மாயா காரியமாகிய சேட்டைகள் ஒன்றுமின்றி பூதசுத்தி, தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, இலங்க சுத்தி என்னும் பஞ்ச சுத்திகளையும் செய்து அகப்பூசை, புறப்பூசைகளைப் புரிந்து, அக்கினி காரியமுஞ் செய்து, திருவருளை வழி ஒழுகி, பெரும் நன்மையுடைய இந்தக் கிரியா பாதம். அக்கிரியை அநுட்டிக்க வல்லவர் எமது சமீபத் திருத்தலாகிய சாமீப பதத்தைப் பெறுவர்.*

''கந்த வர்க்கமுங் கிளர்மணப் புகையும்,
கவின்கொ டீபமும் புனிதமஞ் சனமுங்
கொந்த விழ்ந்தநன் மலருமற் றுளவுங்
கொண்டு மாயையின் குணங்களொன்றிலரா
யைந்து சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி
யங்கி யின்கடன் கழித்தருள் வழிநின்
றிந்த நற்பெருங் கிரியையன் புடனே
யியற்ற வல்லவ ரெம்மரு கிருப்பார்''

(திருவாதவூரடிகள் புராணம்)

மேலே காட்டப்பெற்ற கிரியை உறுப்பில் - விநாயக குருவழிபாடு ஆசமனம், பிராணாயாமம், பவித்திரமணிதல், சங்கற்பம், கும்பம் வைத்தல், சகளீகரணம், சிவோகம் பாவனை, பூசை, சிவபூசை, அக்கினி காரியம், சிவசூரிய பூசை, அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், வாஸ்துசாந்தி, பஞ்சகவ்வியம், சிவகஸ்தம், ஞானவாள் என்பனவும் அடங்கும். இவற்றை விரிக்கிற் பெருகும். அவற்றின் விரிவான விளக்கங்களை ஆண்டாண்டு கண்டு கொள்க.

உதாரணத்திற்கு ஒன்று :

**ஞானவாள் :** தர்ப்பையினால் வாள்போலச் செய்து அதில் மந்திரத்தைப் பதித்தல். அதனால் அது ஞானவாளாகும் தன்மையைப் பெறுகின்றது. மெய்யறிவைத் தந்து பொய்யறிவைப் போக்குவதால் ஞானசக்தி வாளாகக் கொள்ளப்படும்.

அந்த உண்மையைத் திருவாசகம் இந்த வகையாக விளக்கும் :

''ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே.

நாதப்பறை - திருநாம ஒலி. மதிவெண்குடை - அறிவாகிய தெளிவு.
நீற்றுக்கவசம் - விபூதிப் போர்வை. வானவூர் - சிதாகாசம்.
மாயப்படை - அகப்பகை, காமம் குரோதம் முதலாயின.

இவ்வகையான கிரியை விளக்கங்களை முத்தமிழ் வேதத்தில் முழுமையாகக் காண்டல் அரிது. உண்டிக்கு உருக்கிய நெய் ஊற்றியது போல ஆகம அரும்பொருளைத் தொட்டுக் காட்டும்.

ஒருவரைப் பார்த்துச் சாப்பிட்டீர்களா? என்று வினாவுகின்ற போது, அவர், ''ஓம் சாப்பிட்டேன்'' என்று சுருக்கமாகப் பதிலளிப்பார். அந்தச் 'சாப்பிட்டேன்' என்ற வார்த்தைக்குள், கை சுத்தம் பண்ணியதிலிருந்து, சோறு, கறி வகை, பருப்பு, ரசம், குளம்பு, தயிர், பாயசம், வடை, வாழைப்பழம் எல்லாம் அடங்குவது போலத் தான் முத்தமிழ் வேதம் சிவாகமக் கிரியைச் செப்பும். உதாரணத்திற்கு ஒரு சில தேவாரங்களைக் காட்டுதும்:

''சித்தம் தெளிவீர்காள் அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ முத்தி யாகுமே (திருமுறை – 1)

செந்தளிர்மா மலரோனுந் திருமாலு மேனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த வெளிப்பட்டோ னமருங் கோயில்
புந்தியினான் மறைவழியே புற்பரப்பி நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர் சேருமூர் மிழலையாமே
(திருமுறை – 1)

பாலின னறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினான் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே (திருமுறை – 1)

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக் கோநம னால்முனி வுண்பதே (திருமுறை — 5)

நறைமலி தருமள னொடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமக டலைவரே (திருமுறை — 1)

காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே (திருமுறை — 4)

ஆடினாய் நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய்ருளாய் சுருங்கஎம் தொல்வினையே

— வளரும்

★ ★ ★

# நற்சிந்தனை

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவான னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்.

அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னாலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னை வினையெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே.

போற்றியொரு பொல்லாப்பு மில்லை யென்ற
பூங்கழல்க ளவைபோற்றி புவியுள் ளோர்கள்
ஏற்றுகின்ற திருவடிக ளென்றும் போற்றி
எளியேனை யாண்டுகொண்ட கரிணை போற்றி
சாற்றரிய மலர்ச்சோலை தயங்கு கின்ற
தண்புனல் சேர்நல்லூரிற் குருவாய் வந்து
வீற்றிருந்தென் வினைதீர்த்த விமலா வுன்னை
வேறாக எண்ணுதற்கு விதியு முண்டோ ?

— யோகர் சுவாமிகள்



தொடர் - 2

# சிறுவர் கந்தபுராண அமுதம்

— மாதாஜி

## 5. பாலியாறு

கருங்கடலில் வெண்முகில் நீரை முகர்ந்து கருநிறமாகி, நிறை கர்ப்பிணி போலநகர்கின்றது அதன் உருவம் இருண்ட நிறம் அந்த நேரம் வான வில்லும் தோன்றியது. கரிய மேகம் வானவில்லுடன் சேர்ந்து நந்தி மலை மீது வாய் திறந்து நீரினால் அபிடேகம் செய்கின்றது. எப்படியென்றால், கண்ணப்பநாயனார், கையில் வில்லுடன் காளத்தியப்பராகிய சிவலிங்கத்திற்கு தன் வாயில் கொண்டு வந்த நீரினால் அபிடேகம் செய்வது போன்று காணப்பட்டது.

அவ்வாறு மேகம் நந்திமலை மீது பொழிந்த மழையானது குழந்தை போல் தவழ்ந்து நடந்து கன்னிபோல் ஆடிப் பாய்ந்து பாலி நதியாக விவசாயிகளின் பயிர்களை வளம் பெறச் செய்கின்றது. இப்பாலி நதி விவசாயிகள் நினைத்த போது பெருகிவரும் அற்புதமுடையது. மீன்கள் கூட இந்த நதியில் எதிர்நீச்சல் போடுமளவு பாய்கின்றது.

பாலியாற்றின் இருகரைகளிலும் குவளை மலர்கள் மலர்ந்து காணப்படுவது, தீபங்கள் ஏற்றி வைத்தது போலாகும். நமிநந்தியடிகள் விளக்கை எரிக்கக் குளத்து நீரை நெய்யாக ஊற்றியது போல, பாலியாறும் குவளை மலர்களாகிய தீபங்களுக்கு நெய்போன்று காணப்படுகின்றது. இத்தகைய பாலி நதி நாட்டின் நீர் வளத்தைப் பெருக்கி செல்வமுடைய நாடாக்கியது.

## 6. தாட்சாயணி

ஒரு நாள் இந்திரனின் மகன் சயந்தன் தனது குருவாகிய பிரகஸ்பதியை வணங்கினான். பின்னர் ''சுவாமி நூற்றெட்டு யுகங்களாக என் தந்தை சூரபதுமனுடன் போர்செய்து துன்பமடையக் காரணம் என்ன?'' என்று கேட்டான். பிரகஸ்பதி காரணம் கூறத் தொடங்கினார்.

பிரம்மாவின் பெருவிரலில் இருந்து 'தக்கன்' என்பவன் தோன்றினான். கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினான். உலகிற்கு முதல் தெய்வம் சிவபெருமான் என்பதைப் பிரமா மகன் தக்கனுக்கு உபதேசம் செய்தான்.

சிவபெருமானை வணங்கிச் சிவனை அடைபவர்கள் எல்லா நலன்களையும் பெறுவார்கள். காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்தல் வேண்டும் நீராடி திருவைந்தெழுத்தை முக்கரண சுத்தியுடன் தியானித்தல் வேண்டும். கைகளால் அருச்சனை செய்தல் வேண்டும். கால்களால் ஆலயம் வலம் வரல் வேண்டும். இவ்வாறு சிவ வழிபாடு பற்றித் தக்கனுக்கு உபதேசித்தான்.

சிவபெருமானின் பெருமைகளைத் தந்தை கூறக்கேட்ட தக்கன் தவம் செய்ய இமயமலைக்குச் சென்றான். ஒற்றைக் காலில் நின்று தவம் செய்தான். சிவபெருமானும் உமாதேவியும் காட்சி அளித்தார்கள். ''தக்கன் தோத்திரம் செய்தான்'' சுவாமி உனக்கு என்ன வரம் வேண்டுமெனக் கேட்டார்.

தக்கன் சுவாமி தேவரும் மூவரும் என்னை வணங்க வேண்டும். தாங்கள் எனக்கு மருமகனாக வரவேண்டும் என்று கேட்டான். சிவனும் ''அப்படியாகட்டும்'' என்று கூறி மறைந்தார்.

தக்கன் மேருமலையில் ''தட்சமாபுரம்'' என்ற நகரத்தை அமைத்தான். வேதவல்லி என்பவளைத் திருமணம் செய்தான். தக்கனுக்கு ஆயிரம் ஆண் குழந்தை பிறந்தன. தக்கன் தன் ''குழந்தைகளைப் பார்த்து நீங்கள் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து என்னைப் போலாவீர்கள்'' என்று கூறித் தவம் செய்ய குழந்தைகளை அனுப்பினான்.

நாரதர், தக்கனின் பிள்ளைகள் தவம் செய்யுமிடம் வந்தார். பிறவா வரம் கேட்டுத் தவம் செய்யும்படி அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள். அவ்வாறே அவர்கள் தவம் செய்து சிவனை அடைந்தார்கள். தக்கன் இச்செய்தி அறிந்து கோபித்தான். மீண்டும் ஆயிரம் ஆண்குழந்தைகளைப் பெற்று முன்போலவே கூறி இக் குழந்தைகளை அனுப்பினான். அப்போதும், நாரதர் தக்கனின் பிள்ளைகள் தவம் செய்யும் நோக்கத்தைத் திருப்பிப் பிறவா வரம் கேட்டுத் தவம் செய்யும்படி உபதேசம் செய்துவிட்டு போய்விட்டார்.

நாரதரின் சதியை அறிந்த தக்கன் திருமணம் ஆகக்கூடாதெனச் சாபம் இட்டான். பின்னர் ஆண்பிள்ளைகளால் எதுவும் சுகமில்லையென்று ஐம்பது பெண் குழந்தைகளைப் பெற்றான். பத்துப் பெண்களைத் தரும தேவனுக்கும் பதின்மூன்று பெண்களைக் காசிப முனிவருக்கும் திருமணம் செய்து கொடுத்தான். இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்கும் திருமணம் செய்து கொடுத்தான்.

சந்திரன் கடைசி மனைவியிடம் மட்டும் அளவற்ற அன்பு வைத்திருந்தான். மற்றைய மனைவிமாரைச் சந்திரன் திரும்பியே பார்க்கவில்லை. அதனால் இருபத்தாறு மனைவிகளும் சந்திரன் செயலைத் தந்தைக்கு முறையிட்டனர். தந்தை தக்கனுக்குக் கோபம் வந்தது. சந்திரனைத் தேய்ந்து போகும்படி சாபம் போட்டான். சந்திரனின் பதி

னாறு கலைகளும் ஒவ்வொன்றாகப் பிரிந்துகொண்டே இருந்தது. சந்திரன் சிவபெருமானை அடைக்கலம் புகுந்தான். சிவபெருமான் பிறைச் சந்திரனைத்தன் சடாமுடியில் வைத்தான்.

சில நாள் கழிந்தபின், தக்கனும் வேதவல்லியும் யமுனைக்கு நீராடச் சென்றார்கள். அப்போது ஆயிரமிதழ் தாமரை மலரில் வலம்புரிச் சங்கு ஒன்று இருந்தது. அதனைத் தக்கன் கையிலெடுக்கும் போது, வலம்புரிச்சங்கு அழகான பெண்குழந்தையாக மாறியது. உமாதேவியே தனக்கு மகளாக வந்தாளென்று தக்கன் மகிழ்ந்தான். தக்கனும் வேதவல்லியும் மாறி மாறி அணைத்து முத்தமிட்டார்கள்.

குழந்தைக்குத் தாட்சாயணியென்று நாமமிட்டார்கள். தாட்சாயணிக்கு ஐந்து வயதாகியது. தாட்சாயணி தவச்சாலை அமைக்கச் சொல்லி, அதில் இருந்து சிவனை நினைந்து தவம்செய்து வந்தாள்.

சிவபெருமான், தன் மருமகன் சந்திரனுக்கு அபயம் அளித்தமையால், தக்கன் தன் மகள் தாட்சாயணியைச் சிவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதில்லையென்று சபதம் செய்தான். இதனையறிந்த சிவபெருமான் இரகசியமாகத் தாட்சாயணியைத் தன்னுடன் கூட்டிச் சென்று விட்டார். இதனால் தக்கன் ஆத்திரம் அடைந்தான்.

சிவனுக்கு எதிராக ஓர் யாகம் செய்தான் மகாவிஷ்ணுவைத் தலைவனாக நியமித்தான். தக்கனுக்குப் பயந்து பிரமா, சரஸ்வதி, சூரியன் முதலியோரும் இந்திரன் முதலான தேவர்களும் வந்தார்கள்.

இதைத் தாட்சாயணி அறிந்தாள். சிவபெருமானையும் தந்தையின் யாகத்திற்கு வரும்படி கேட்டாள். அழைப்பில்லா இடத்திற்கு நான் வரமாட்டேன் என்று சிவன் கூறினார். தாட்சாயணி தந்தையின் யாகத்திற்கு வந்தாள். சிவனைத் தவிர மற்ற எல்லாத் தேவர்கள் முனிவர்களும் வந்திருந்தார்கள். சக்திக்குக் கோபம் வந்தது. தந்தையை விசாரித்தாள். தக்கன் சிவபெருமானைத் தூஷித்துப் பேசினார்.

சிவத்துரோகம் செய்த தக்கனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமெனச் சக்தி சிவனை வேண்டினாள். சிவனுடைய கோபத்திலிருந்து வீரபத்திரர் தோன்றினார் சக்தியின் கோபத்திலிருந்து காளி தோன்றினாள். இருவரும் நேராகச் சென்று தக்கன் யாகத்தை அழித்தார்கள் தக்கனின் தலையை வெட்டி யாகத்தீயில் போட்டார் வீரபத்திரர். தேவர்களையும் கண்டித்தார். பின்னர் தேவர்களின் வேண்டுதலுக்கு ஆட்டுத் தலையைத் தக்கன் உடம்பில் வைத்து உயிர் கொடுத்தார். தக்கன் தன் தவறை நினைந்து சிவனுமையிடம் மன்னிப்புக் கேட்டான்.

சிவத்துரோகம் செய்த காரணத்தால் தேவர்கள் இப்போது சூரனால் துன்பமடைவதாக பிரகஸ்பதி கூறினார்.

தக்கன் யாகத்தின் பின் சிவத்துரோகம் தக்கன் வளர்த்த உடலை நீக்கி மலையரசன் மகளாக அவதாரம் செய்தாள்

## 7. சிவனின் யோகநிலை

பார்வதி தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் சூரபத்மனின் கொடூர ஆட்சியால் தேவர்கள் வருந்தினார்கள். சூரபத்மன் தனது தவவலிமையால், ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி அரசாட்சி செய்தான்.

எல்லாம் வல்ல சிவபெருமான் ஞான வடிவானவர். இன்பமும் துன்பமும் இல்லாதவர். அவர் கைலாயமலையில் கல்லால நிழலில் தென் முகம் நோக்கித் தெட்சணாமூர்த்தியாய் சாந்தமாய் வீற்றிருந்தார்.

பிரம்மாவின் புத்திரர்களான சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகியோர் வேதம், ஆகமங்கள் மற்றும் எல்லாச் சாத்திர நூல்களையும் சந்தேகமின்றிக் கற்றும் தெளிவில்லாமல் எம்பெருமானிடம் சென்று, தங்கள் குறைகளை எம்பெருமானிடம் முறையிட்டார்கள்.

எம்பெருமான், சும்மா இருத்தலே ஞானம் அடையும் வழியென்பதைச் சின்முத்திரை வடிவில் கரங்களை வைத்து மௌனமாக இருந்தார். சின்முத்திரை என்பது நான்கு விரல்கள் ஒரு பக்கம், கட்டை விரல் தனித்தும் இருக்கின்றது. தனித்து இருக்கும் கட்டை விரலுடன் ஆட்காட்டி விரல் இணைந்து நிற்பது ஆகும்.

கட்டை விரல் பதி (கடவுள்), ஆட்காட்டி விரல் ஆன்மா (உயிர்) மற்றைய மூன்றும் ஆணவம், கன்மம். மாயை என்ற மூன்று மலங்களுடன் கூடி நிற்கும் ஆட்காட்டி விரலாகிய ஆன்மா, மூன்று மலங்களை விட்டு இறைவனுடன் சேர்வது போலக் கட்டை விரலுடன் சேர்ந்து நிற்பதுவே சின்முத்தியாகும்

கணப் பொழுதுதான் எம்பெருமான் மோன நிலையில் இருந்தார். இது தேவர்கட்கு பல யுகங்களாக இருந்தது.

## 9 சூரபத்மனின் கொடுங்கோல் ஆட்சி

எம்பெருமானின் மோன நிலையால் விண்ணுலகில் வானவர்க்கும், மண்ணுலகில் மானிடர்க்கும் சிற்றின்ப வாழ்வு முற்றாக நீங்கி யாவரும் துறவற வாழ்வில் காணப்பட்டனர். படைத்தல் தொழிலும் நிகழவில்லை.

சூரபன்மனின் கொடுங்கோல் ஆட்சிக்கு உறுதுணையாக தர்மகோபன் என்ற முதல் மந்திரி இருந்தான் அவன் தேவர்களை ஒவ்வொருவராகச் சூரனிடம் அனுப்பினான். சூரனும் தன்னிடம் வரும் தேவர்களை ஒவ்வொருவராக விசாரிப்பான்.

''யார் நீ? நான் சூரியன்'' ஓகோ நீதான் சூரியனா இனிமேல் இவ்விடத்தில் உன்னால் சூடு உண்டாகக் கூடாது என்றான் சூரன். அடுத்து சந்திரன் வந்தான். சூரன் சந்திரனைப் பார்த்துச் சந்திரனே எனது மண்டலத்தில் நீ தேயவும் வளரவும் கூடாது என்று கட்டளையிட்டான்.

அடுத்து இயமன் நடுங்கியபடி வந்து நின்றான். சூரனுக்கும் இயமன் தன் பெயர்களையும் தொழிலையும் அறிமுகப்படுத்தினான். சூரன் எனது மண்டலத்தில் உன் தொழில் இருக்கக் கூடாதெனப் பணித்து அனுப்பினான் அடுத்து தேவேந்திரன் வந்தான். அவனும் தன்னைச் சூரனுக்கு அறிமுகம் செய்தான்.

சூரன் தேவேந்திரா! உனக்கு நல்ல வேலை தருகிறேன். கடலில் ஒவ்வொரு நாளும் மீன் பிடித்து எனது மண்டலத்தில் இருக்கின்ற வீடுகளுக்குக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டும். அவர்கள் விரும்பிக் கேட்கும் மீன்களையே கொடுக்க வேண்டுமென்று கட்டளையிட்டு இந்திரனை அனுப்பினான். இவ்வாறு ஒவ்வொரு தேவர்களுக்கும் கொடிய வேலைகளைக் கொடுத்தான்,

பின்னர் சூரனின் மகன் பானுகோபன் இந்திரலோகச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிச் சயந்தனைச் சிறைப்படுத்தினான்.

தொடரும்............

★ ★ ★

## மானிப்பாய் மருதடி விநாயகனே

ஓங்கார ரூபமே விநாயகனே
ஞான முதல்வனே விநாயகனே
வெற்றியைத் தந்திடும் விநாயகனே
வேண்டுவார் வேண்டிடும் விநாயகனே.

சித்தியை நல்கிடும் சித்தி விநாயகனே
சிவசக்தி மைந்தனே விநாயகனே
நல்லவை அருளிடும் விநாயகனே
ஆனைமுகக் கடவுளே விநாயகனே.

ஔவைக்கு அருளிய விநாயகனே
ஐந்து கரனே விநாயகனே
மோதகப் பிரியனே விநாயகனே
எலியின் மீது வலம் வரும் விநாயகனே.

## கந்தன் கையில் தவளும் வேல்

தகதக என்னும் தங்கவேல் பளபள வென்று மின்னும்வேல்
அசுரர்களை அழிக்க வந்தவேல் முருகன் ஏந்திய வெற்றிவேல்.
சூரனை அழிக்க எடுத்தவேல் சக்தி தாய் வழங்கியவேல்
ஞானம் தந்த ஞானவேல் கந்தன் கையில் தவளும் வேல்.

ஆக்கம் : கிருஸ்ணசாமி சுவர்ணா
மானிப்பாய்

உ

# சுபானு புதுவருடப் பிறப்பு

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'' என்பது எமது தினாந்தரப் பிரார்த்தனை. ''வையக மெல்லாம் துயர் தீர்க்கவே'' என்பது நாம் படிக்கும் திருமுறை. ''பெருகலாம் தவம் பேதைமை தீரலாம் திருகலாகிய சிந்தை திருத்தலாம்'' என்பது அப்பர் பெருமான் வாக்கு. இன்றைய தினத்தில் எமதுள்ளத்தில் இருத்த வேண்டிய வாசகங்கள் இவை. எங்கும் சிவமயம், எல்லாம் சிவமயம், எதிலும் சிவமயம் என்று எண்ணி யெண்ணி இறும்பூது எய்தவேண்டுமானால் ஒவ்வொரு அடியும் திரு வருளை நோக்கி வைக்க வேண்டுமென்பதற்குப் பயின்று கொள்ள வேண்டும். காலத்தை அளந்து அளந்து வாழுகிறோம். அளவுக்கும் எமக்கும் சம்பந்தமில்லை என்றாலும் அது தானாகவே இயற்கை நிய திப்படி அமைந்து எம்மை விழிப்படையச் செய்கிறது கடந்த ஆண்டு நாமாற்றிய தரமான கருமங்கள், தவறான செயல்கள் புத்தாண்டில் நினைக்கப்பெற்று மேலும் தரமான பாதைக்கு வழிநடத்தத் தூண்டுகிறது. ஒழுக்கமும் தெய்வ நம்பிக்கையும் இணைந்து இடைவிடாது முயற்சி செய்து வாழ்வை வளமாக்க உறுதிபூண வேண்டும் தெய்வ நம்பிக்கை யுடையவர்களே நியாயத்துக்குக் கட்டுப்படுவார்கள். பிறர் துன்பங் கண்டு வருந்துவதோடு அதனைப் போக்கிடவும் முன்வருவார்கள். நமது சமயப் பெரியோர்கள் ஆத்மீகத் துறையில் எவ்வளவு உயர்ந்து நின் றார்களோ, அந்த அளவு மக்கள் தொண்டு செய்திருக்கிறார்கள். இதனால் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரரானார்கள். இந்த நிலை கைவருமானால் மற்றவர்களால் ஏற்படும் துன்பங்கள் எம்மை நலி வடையச் செய்ய மாட்டா. கோளறு பதிகம் இதனை அழகாகக் காட்டுகிறது.

''கோளரி யுழுவை யோடு கொலையானை கேளல்
கொடுநோய்க ளான பலவும்
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.''

என்பது ஞான வாக்கு. இவை எமது இல்லங்கள் தோறும் இடம்பெற வேண்டும். புதுவருடப் பிறப்பு என்றால் இறை வழிபாட்டுடன் பொங்கல் செய்து தாமுண்டு பிறருக்கு வழங்கலும் பெரியவர்கள் கையினால் பணம் பெற்று மகிழ்வதும் விருந்தயர்தலும் சுபநேரம் பார்த்துப் புதுக் கருமங்களை ஆரம்பிப்பதும் ஆலய வழிபாட்டைத் தவறாது செய்தலும் எமது பண்டுதொட்டுவரும் மரபாகும். இவற்றை வெறுஞ் சடங்காக மட்டும் மேற்கொள்ளாமல் உள்ளத்திலும் புதுமையுணர்வு ஓங்கி ''நானும்

*வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்பேன்'' என்ற ஒரு திடசங்கற்பத்தை எடுத்துக்கொள்வது மேலானது. சிந்தனையிலும் செயலிலும் புதுமை காண வேண்டும்.*

*''அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி மனத்துள்ளே பேதா பேதம் பொய், வஞ்சம், களவு, சூது, சினத்தையும் தவிர்ப்பாராகில் செய்தவம் வேறொன்றுண்டோ'' என்றார் ஒரு பெரியார். சமய வாழ்வு என்பது தனக்குத்தானே நற்சான்று பகர்வதிலேதான் வெற்றி காண்கிறது. கல்வி என்பதும் நீதி, சத்தியம், அறம் என்பவற்றின் சார்பிலே வளர வேண்டும். இன்று கற்றவர் மத்தியிலே பல ஊழல்களைக் காணுகிறோம். கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் என்று சொல்ல நேரிடுகிறது. ஆகவே புத்தாண்டை முன்னிட்டு எமது பணிகளை நல்லபடி வகுத்து தெய்வத்தை முன்வைத்து திருவருளைத் துணைகொண்டு அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும் அகத்திலே அன்புங் கொண்டு வாழ வழிகாண்போமாக.*

---

★ ★ ★

## துக்கம் வராத வாழ்வு

எல்லாப் பிறப்புகளிலும் மனிதப் பிறப்பு உயர்ந்தது. எல்லா ஜீவன்களுக்கும் வாய் உண்டு. ஆனால் அவை உணவை எடுப்பதற்கும் சத்தம் போடுவதற்குமே பயன்படுத்துகிறது. மனிதன் ஒருவனுக்குத்தான் இந்த வாய் பகவானுடைய நாமம் சொல்லப் பயன்படுகிறது. இதனாலே மனிதப்பிறப்பு நற்கதியடைய வாய்ப்பு ஏற்படுகிறது. கங்கையை நினைத்து ஸ்நானம் செய்யும் போதும் சிவநாமத்தைச் சொல்லி உண்ணும் போதும் எமது இரத்தத்தோடும் நரம்புகளோடும் தெய்வீகம் கலந்து விடுகிறது. ஏனைய பிறவிகளுக்கு இந்த நிலையில்லை. தெய்வீகம் லௌகீகம் இரண்டையும் ஒன்றாக இணைக்க வேண்டும். இணைத்து விட்டால் துக்கமில்லை. வேறுவேறாகக் கருதினால் ஒரே துன்பம் தான்.

## முனிவரும் சிங்கமும்

சிங்கம் முனிவரின் பாதங்களை நக்கித் தலையசைத்து நின்ற காரணத்தை முனிவர் விளங்கி சிங்கத்துக்கு முள்ளுத்தைத்து அவலப்பட்ட போது, முள்ளை நீக்கி துன்பம் போக்கியவர் இம் முனிவர். அதனால் சிங்கம் முனிவரோடு அன்பாய்ப் பழகியது. ஆகவே மிருகம், பறவை இனங்களோடும் அன்பாய்ப் பழகினால் அவை எம்மோடு அன்பாய்ப் பழகும்.

## பிரம்மதாளம்

கோயிற் பூசைகளில் முக்கியமான இடம்பெறுவது பிரம்மதாளமாகும், இது ஓதுவார்களும், இசைக் கலைஞர்களும் வைத்துள்ள தாளத்தை விடப் பல மடங்கு பெரியது. இதன் ஓசை நெடுந் தொலைவு கேட்கும். அடித்து விட்டபின் அதன் ரீங்காரம் அடங்கச் சிறிது நேரமாகும்.

நடராசர் சிற்பங்களில் பிரம்மன்தாளம், போடுவது போல் அமைக்கப்பட்டுள்ளதையும் காணலாம். இவன் இந்தத் தாளத்தைப் போடுவதனால் இந்தத் தாளத்திற்கே பிரம்மதாளம் என்பது பெயராயிற்று என்பாரும் உண்டு.

சிவமஞ்சரி
(ஸ்ரீ பிரம்மபுரீ சுவாமி)



உ

சிவமயம்

# மருதடி விநாயகர்

சமூகஜோதி கா. கணேசதாசன் அவர்கள்

### நேரிசை வெண்பா

திருவாக்கும் செய்கருமம்
கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும்
பெருக்கு முருவாக்கு
மாதலால் வானோரும்
ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

ஈழத்து விநாயகர் வழிபாட்டில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் பழமையும், பெருமையும், முதன்மையும் உடையது. நேர்த்திகள் முடிக்கும் மருதடி விநாயகரது உற்சவ காலத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான இம்மாத ''அருள் ஒளி'' வெளியீட்டை மருதடி விநாயகர் மலராக வெளியிடுவது நாம் செய்த புண்ணிய பயனாகும்.

நாம் எதை எழுதத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிப்போம். இதற்குக் காரணம் விக்னம் இல்லாமல் எந்தக் காரியமும் நடக்க வேண்டும் என்ற நம்பிக்கைதான். எத்தனை துன்பம் வரினும் மானிப்பாய் மருதடி விநாயகனை ஒருகால் நினைப்பின் துன்பங்கள் யாவும் அகலும் என்பது நம் சான்றோர்கள் கண்ட உண்மை.

சித்திரை வருடப்பிறப்பன்று மானிப்பாய் மருதடி விநாயகர் தேரில் வரும் காட்சியைக் கண்டு வணங்கினால் வருடம் பூராவும் நற்பயன் பெறலாம் என்ற நம்பிக்கையில் இந்து சமய மக்கள் யாவரும் மருதடி வந்து பயபக்தியுடன் வணங்கி விநாயகர் அருள்பெறும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வடமொழியிலே கண- என்பது மக்களைக் குறிக்கும். அந்த மக்களுக்கு பதியாக (தலைவராக) இருப்பவர் கணபதி. தேவகணங்களுக்குத் தலைவராக இருக்கும் விநாயகர் வினைகளுக்கெல்லாம் நாயகராகவும் இருப்பதால் விநாயகர் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார். ''சுழி'' என்பது வளைவைக் குறிக்கும். விநாயகரின் தும்பிக்கையில் நுனியானது வளைந்து சுருண்டு காணப்படுவதால் பல இடங்களில் ''வக்ர துண்டர்'' என்ற பெயர் கொண்டு வணங்குவதுண்டு.

யாழ்ப்பாணத்தில் மேன்மை கொள் சைவநீதியை விளங்கவைத்த ஆலயங்களுள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். தமிழரசர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட பிற்காலத்தில் இந்த ஆலயம் அமைந்திருக்காவிட்டால் இப்பொழுது அவரை வணங்கும் அனேகர் பிற மதங்களைச் சேர்ந்தவர்களாக மாறியிருப்பர்.

மருதடியான் உற்சவ நாட்களில் அவர் செய்த அற்புதங்களைப் பற்றிச் சிந்திப்பது நல்லது. மருத மரத்தின் கிழக்குத்திசையை நோக்கி வைக்கப்பட்டிருந்த விநாயக விக்கிரகம் ஒரு நாள் தானாகவே மேற்கு நோக்கித் திரும்பி இருந்ததைக் கண்ட மக்கள் ஆச்சரியமடைந்தனர். கிழக்கில் கிறிஸ்தவ ஆலயம் கட்டப்படுவதாலோ அல்லது கீழ்த்திசை யில் இருந்தால் திருவிழா உற்சவங்களை நடத்தப் போதிய இடவசதி இன்மையாலோ விநாயகர் மேற்கு நோக்கித் தானாகவே திரும்பியுள் ளார் என்பதை உணர்ந்த மக்கள் மருத மரத்தின் மேற்குத் திசையை நோக்கி கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டினார்கள் பழமையும் பெருமையும் சரித்திரச் சான்றும் பெற்றது இவ் மருதடி விநாயகர் ஆலயம்.

ஆயிரம் ஆயிரம் அடியவர்களை தன்னகத்தே அடக்கி பேரருள் பாலித்து வரும் பெருமான் மருதடி விநாயகன். விநாயகர் அருள் பெற் றவர்களுக்கு ''இன்பமே எந்நாளும் துன்பமில்லை'' என்ற அனுப வம் பிறக்கும். பலரது வாழ்வில் பல அற்புதங்களைச் செய்த மருதடி விநாயகருக்கு அன்றாடம் பொங்கிப் படைத்து தங்களது நேர்த்திகளை முடித்து மகிழும் மெய்யடியார்கள் கூட்டத்தினை தினம் தினம் மருதடி யில் காணலாம். மருதடி விநாயகன் புரிந்துவரும் அற்புதங்கள் அனே கம். ஒன்றா இரண்டா எழுதுவதற்கு?

மூர்த்தி தலம் தீர்த்தம் இம் மூன்றும் ஒருங்கே அமைவது ஓர் ஆலயத் திற்குச் சிறப்பாகும். மூர்த்தி — விநாயகர். தலம் — மருது தீர்த்தம் — அமிர்த புஸ்பகரணை. இவை அமைந்த இடம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

இவ்விதமான பெருமைகள் மிக்க ஆலயத்தை சீராகவும் சிறப் பாகவும் பராமரித்து வளர்த்தெடுப்பதற்கு அன்று தொட்டு பலர் பாடு பட்டு வந்துள்ளனர். அவர்களது வழியிலே இன்றைய தர்மகர்த்தா சபை யினர் ஆலயத் திருவிழாக்கள், பூசைகள், கட்டிடப் பணிகள் முதலிய வற்றை நடத்துவதுடன் பல சமூகப் பணிகளையும் ஆற்றி வருவது பாராட்டத்தக்கது.

தன்னலம் ஓங்கி, ஆணவச் செருக்கேறி மாயை வலையில் சிக் குண்டு மனித இனம் அழிவை நோக்கிச் செல்லாமல் தடுப்பதற்கு பரி பாலன சபையினர் பல சமூக சமய அறத் தொண்டுகளையும் புரிந்து வருகின்றனர்.

அடியவர்களின் வயிற்றுப் பசியை நீக்கும் அன்னதானப் பணி யுடன் சமூகத்தின் அறிவை வளர்த்து மருதடி விநாயகருடன் ஒன்று சேர்ப்பதற்காக சமூக சமயச் தொண்டுகளையும் புரிந்து வருகின்றனர்.

அருமையான இப் பூமியில் பெருமையுடன் வாழ வேண்டிய மனித குலம் அழிவை நோக்கி அடியெடுத்துச் செல்வதற்கு அடிப்படையாக அமைவது தெய்வ நம்பிக்கை குன்றியமையும் மனங்கள் பண்பாடமையே காரணம்.

இன்றைய இளைஞர்களின் மனங்களை பண்படுத்தி அறநெறி களைக் கடைப்பிடித்து வாழ வழிகாட்டினால் மட்டுமே வருங்கால நாட் டில் புனிதம் தோன்றும் பேரழிவுகளைத் தடுக்கலாம். இவ்வித நல்ல நோக்கத்துடன் தர்மகர்த்தா சபையினரால் தற்பொழுது நடத்தப்பட்டு வருவதே மருதடியான் அறநெறிப் பாடசாலையாகும்.

''அறநெறிச் சிந்தனை'' நவமலர், மருதடியான் மலர் 2003. போன்ற சமயப் புத்தகங்களையும் மருதடி விநாயகர் புகழ் பாடும் ஒலி நாடாக்களையும் வெளியிட்டமை சாலச் சிறந்த நற் சமூகப் பணிக ளாகும்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சமய, கலை, கலாசாரப் போட்டிகளை நடத்தி அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திவருவது தர்மகர்த்தா சபையினரின் நற்பணிகளாகும்.

திருவாசகம் முற்றோதல், நவராத்திரி, சிவராத்திரி விழாக்கள், பண் இசை வகுப்புகள் நாட்டின் சமாதானம் வேண்டி விசேட பூசை வழிபாடு அன்னதானம் நடத்தியமை வழிபாட்டுக் குழுவினர் மற்றும் தொண்டுள்ளம் படைத்தவர்களை ஒன்று திரட்டி சிரமதானப் பணி களைச் செய்ய வைத்தல். சமயப் பெரியோர்களின் தெய்வீகச் சொற் பொழிவு மூலம் சமய அறிவை வளர்த்தல் மேலும் இவை போன்ற பல நற்சேவைகளை தர்மகர்த்தா சபையினர் ஆற்றி வருகின்றனர்.

இவை போன்ற நற்சேவைகளை ஆலயங்களில் ஆற்றும் போது தான் ஆலயங்களின் அவசியத்தையும் சமூகத்தின் பொறுப்புணர்ச்சி யையும் தனிமனிதனால் உணர்ந்துகொள்ள முடியும்.

மருதடி விநாயகர் மலரடி தொழுவோம்

இன்பமே சூழ்க
எல்லோரும் வாழ்க

---

**உங்கள் அபிமான 'அருள் ஒளி' கிடைக்கும் இடங்கள்**

அலுவலகம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்
கோவில் வீதி
நல்லூர்.

சிறுவர் விருந்து

# அடக்கம் வேண்டும்

அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள்

வேதவியாசருடைய ஆச்சிரமத்தில் வேதாந்தபாடம் நடந்துகொண்டு இருந்தது. இடையிடையே நல்ல சுவையான கதைகள், நகைச்சுவையான கேள்வி பதில்கள், கூர்மையான புத்திமதிகள் எல்லாம் பரிமாறப்பட்டன.

அப்போது ''ஒருவர் எவ்வளவு தான் கவனமாக நடந்துகொண்டாலும் பொன், பெண் என்னும் இரண்டு விடயங்களிலும் மிக விழிப்போடு நடந்துகொள்ள வேண்டும். ஒருவர் எவ்வளவு கவனமாக இருந்தாலும் இந்த இரண்டு விடயத்தில் தவறிப்போகும் சந்தர்ப்பம்-சூழ்நிலை உருவாவது உண்டு. ஆகவே, இந்த இரண்டிடமிருந்தும் விலகியிருப்பது நல்லது. எப்போதும் நம்மை நாம் மிக நிதானமாகக் காத்துக்கொள்ள வேண்டும்'' என்றார் வியாசமுனிவர்.

ஜைமினி என்ற சீடர் எழுந்தார்.

''குருவே! தாங்கள் கூறுவது சரியாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை நான் திடசித்தம் பூண்ட நைட்டிகப் பிரம்மச்சாரி. எந்தப் பொருளும் / எப்படிப்பட்ட போகமும் என்னை எவ்விதத்திலும் அசைக்க முடியாது.'' என்று உறுதியுடன் கூறினார்.

''பேஷ்! பேஷ்!'' என்று பாராட்டினார் குரு. மற்றவர்களிற்குச் சொன்னார்.

''இதோ பாருங்கள் பிள்ளைகளே! நமது ஜைமினி இரும்புப்பாவை போன்றவர். காமினி, காஞ்சனம் எதுவுமே அவரை அசைக்க முடியாது ஆனால்; நீங்கள் கவனமாக இருங்கள். இந்த இரண்டின் மாயைக்குள் விழாமல் உங்களை சர்வசாக்கிரதையாகக் காத்துக்கொள்ளுங்கள்'' என்று கூறினார். சிலநாட்களின் பின் வியாசர் காசிக்குப் போகப் புறப்பட்டார்.

''மாணவர்களே! காசிக்குப்போய் இரண்டொரு திங்கள் வசித்து மீண்டும் வருவேன். ஆச்சிரமத்தை நன்கு கவனியுங்கள். கல்வியில் சிரத்தையுடன் இருங்கள். நல்லொழுக்கம் நன்கு பேணப்பட வேண்டும். பரஸ்பரம் அன்பும், அருளும் உடையவர்களாய் இருங்கள். ஒருவரை ஒருவர் பேணிக்காப்பாற்றுங்கள். வெளிவிடயங்களில் ஈடுபடாதீர்கள் புலனடக்கத்தை நல்லபடி காத்துக்கொள்ளுங்கள்! தருமத்திலிருந்து தடுமாற வைக்கும் சோதனைகள் ஏற்படும்போது, குருவின் வார்த்தைகளைச் சிக்கெனப் பிடித்து உங்களை நிதானப்படுத்திக்கொள்ளுங்கள்.

வீண் கர்வம் வேண்டாம். உங்களை நன்கு காத்துக்கொள்ளுங்கள் என்று உபதேசித்து விட்டுச் சென்றார்.

ஒரு வாரம் கழிந்தது. தனது சீடனின் நல்லொழுக்கத்தை பரிசோதிக்க விரும்பினார் வியாசர். ஒரு நாள் மாலை மப்பும் மந்தாரமுமாக இருந்தது. தூரத்தில் மேகம் திரண்டு இடிமுழக்கம் செய்தது. ஆச்சிரமத்துக்கு வரும் வழியில் ஒரு மரத்தடியில் மிக அழகிய இளம் பெண் வேடம் தாங்கி வியாசர் நின்றார். மருண்டபார்வையுடனும் சர்வ அலங்காரங்களுடனும் நின்ற அப்பெண்ணைக் கண்டார் ஜைமினி.

''யாரம்மா நீ'' என்று கேட்டார்.

''காட்டுவழியேசென்ற யாத்திரைக்குழுவில் வந்தவள். எப்படியோ தனியாகி விட்டேன். என்னுடன் வந்தவர்கள் தேடிவரும் வரை இங்கே நிற்கிறேன்'' என்றாள் அந்தப்பெண்.

''சகோதரி! நன்றாகக் களைத்துப்போய் இருக்கிறீர்கள். தயவு செய்து ஆச்சிரமத்திற்கு வாருங்கள். சற்றுத்தங்கி, இளைப்பாறுங்கள்'' என்று அழைத்தார் ஜைமினி.

''நீங்கள் மட்டும் தானா? அல்லது யாராவது பெண்கள் இவ்விடத்தில் இருக்கிறார்களா?'' என்று தயங்கினாள் அப்பெண்.

''சகோதரி! நானோ திடசித்தம் பூண்ட நைட்டிகப் பிரம்மச்சாரி. என்னை நீங்கள் திடமாக நம்புங்கள். உங்களைப் பாதுகாத்து உரியவர்களிடம் ஒப்படைப்பது என் பொறுப்பு. வாருங்கள் பர்ணசாலைக்கு'' என அழைத்தார் ஜைமினி. அப்போது மழையும் கொட்ட ஆரம்பிக்கவே, அந்தப்பெண் வேறுவழி இல்லாமல் ஆச்சிரமத்துக்கு வந்தார்.

அன்றிரவு ஆச்சிரமத்தின் உள் அறையில் அவளைப் படுக்க வைத்து வெளித்திண்ணையில் படுத்தார் ஜைமினி. நடு இரவு. ஜைமினிக்கு நித்திரை வரவில்லை. அந்தப் பெண்ணிடம் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டு இருந்தால் என்ன என்று தோன்றியது.

வெறுமனே பேசிக்கொண்டிருப்பதால் எந்தத் தவறும் ஏற்படமாட்டாது. அதுமட்டுமில்லை... இந்தப்பெண் யார், எங்கிருக்கிறவள். ஏன் காட்டில் தனிமைப்பட்டாள் என்றெல்லாம் நமக்குத் தெரியாதே. அவற்றை விசாரித்து, அவளுக்கு ஆறுதல் கூறுவதில் எந்தத் தவறும் இல்லையே'' என்று நினைத்த ஜைமினி கதவைத்தட்டி அப்பெண்ணை இனிய குரலில் அழைத்தான். ''அன்பான சகோதரி! வெளியே காற்றும் தூறலும் கடுமையாய் உள்ளன. உள்ளே வர அனுமதிகொடு'' என்று கெஞ்சினார். அந்தப்பெண் கதவைத் திறந்தாள். உள்ளே வந்த ஜைமினி ஒரு பக்கம் ஒடுங்கி உட்கார்ந்தார். தாயே! பயமின்றி நித்திரை கொள்ளலாம்'' என்று கூறினார். அந்தப் பெண் ஒருபுறம் படுத்து நித்திரை செய்தாள். அவளுடைய அழகும் இளமையும் ஜைமினியின் மனதில் கிளர்ச்சியை ஊட்டின.

அவர் மிக மெதுவாக அந்த அழகியின் கைகளைப்பற்றி அவளை எழுப்பினார்.

எழும்பிய அப்பெண் ஜைமினியின் மனநிலையை அறிந்துகொண்டாள். அடுத்த நிமிடம் பெண் இருந்த இடத்தில் பெரிய தாடி, மீசை, ஜடாபாரத்துடன் வேதவியாசர் காட்சி அளித்தார்.

'' ஜைமினியே! உனது திடசித்தம், வைராக்கியம், பிரம்மச்சரியம் எல்லாம் எங்கே போயிற்று?'' என்று கேட்டு கடகடவெனச் சிரித்தார் வியாசர். வெட்கித்தலை குனிந்த ஜைமினி ''குருவே! என்னை மன்னிக்க வேண்டும். மாயையின் வல்லமை பெரியது. எனது கர்வம் இன்றுவரை கண்ணை மறைத்திருந்தது. இனி மிகவும் கவனமாக இருப்பேன்'' என குருவின் காலில் விழுந்து அழுதார்.

உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் கூடமாயா சக்தியினாலும், சந்தர்ப்ப சூழ்நிலையின் தூண்டுதலாலும், கட்டுபடாத மனதினாலும் ஏமாற்றப்படுகிறார்கள். எனவே; பிரமச்சாரிகள் ஒவ்வொரு இடத்திலும் வெகு கவனமாக இருக்கவேண்டும். இனி அடக்கமாக இருப்பாயாக! என்று கூறினார் வியாசர்.

அதுமுதல் வரட்டுக் கர்வத்தை விட்டு விட்டு மிக அவதானமாக நடந்து, சீலம்மிக்கவரானார்.

இதே ஜைமினி முனிவர் தான் பூர்வ மீம்மாம்ஜை என்ற கர்மகாண்டத்தை எழுதி புகழ் பெற்றவர்.

அன்பான மாணவர்களே! நீங்கள் வளர்ந்த பிறகு இவர்களைப் பற்றி விரிவாக வாசிப்பீர்கள். தன்னடக்கம் மிக அவசியம் என்பதே இந்தக் கதையின் நோக்கம்.

★ ★ ★

## சித்திரை மாதச் சிறப்புக்குரிய விழாக்கள்

சித்திரை மாதத்தில் சித்திரை புதுவருடப்பிறப்பு மிகவும் விசேடமானது. சூரிய பகவான் சித்திரை மாதத்தில் மேட இராசியில் உதயம் செய்கின்றான். இரவுக் காலமும், பகற்காலமும் சமனான காலம் மேடசங்கிராந்தி என்பார்கள். இப்புண்ணிய நாளில் மருத்து நீர் வைத்து ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து ஆலய வழிபாடுகள் செய்தல் வேண்டும். மங்களகரமாகக் கொண்டாடும் இந்நாளில் சூரியன் உதயமாகும் வேளையில் சூரியனுக்கு பொங்கல் செய்து பூசை வழிபாடு செய்தல் வேண்டும். உழவர் பெருமக்கள் ஏர்மங்கலம், வயற்செய்கை ஆரம்பிப்பார். கைவிஷேசம் பெற வழங்க சிறந்த தினமாகும்

சித்திராபூரணை நாள் தாய்மார்களை நினைந்து வழிபாடு செய்யும் சிறந்த நாள். சித்திரை மாதம் தேவர்களுக்கு மத்தியானம் சித்திரை மாத சித்திரை நட்சத்திரத்தில் சந்திரன் சேர்ந்து நிற்கும் காலம். தேவர்கள் மத்தியான வேளையும் பிதிர்களுக்கும் ஒன்றாதலினால் தாய்மாருக்கு கடைமை செய்தால் பிதுரர்கள் நன்மை தருவர். இந்த நாளில் சித்திர குப்தருக்கு பூசை வழிபாடு செய்தல்வேண்டும். ஆலயங்களில் சித்திரபுத்திரனார் கதை படித்தல் சித்திரைக் கஞ்சி வார்த்தல் சிறப்புக்குரியதாகும் சித்திரையிற் சித்திரை வரும் சித்திராபூரணை நாளில் வழிபாடு செய்து நீண்ட ஆயுளைப் பெறலாம் என்பர். ''காண்டாவனம்'' என்பது அக்கினி நாளைக் குறிக்கிறது இந்திரனின் வனம் என்பார்கள். மிகவும் உஸ்ணமான காலம். முன்னோர்கள் இக்காலங்களில் சுபகரு மங்களைத் தவிர்த்துக் கொள்வார்கள்.

உ

மருதடியான் மாதங்கன்
மலரடிகள் துதித்து வந்தாள்
திருமலியும் சுபானுத்தாய்
திருமகளாம் சித்திரையாள்
பொருள்மலியும் கல்வியொடு
வீரமுடன் கண்ணியஞ்சேர்
அருளொளியில் அனைவருமே
அன்புடனே வாழ்த்திடுவோம்.

'கவிமாமணி'


அட்டை பதிப்பு: பிள்ளையார் அச்சகம்,